THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.307/2020** | **PW.4** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு. குருஸ்மாணிக்கம் | |
| Father/Husband | : திரு.ஜேஸ் அந்தோணி | |
| Village | : மன்னார்புரம் | |
| Taluk | :திசையன்விளை | |
| Employment | :பிளம்பர் | |
| Age | :50 | Date: 02.09.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**( A1 Present, A2 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

<u>**முதல் விசாரணை**</u> :–

1. நான் திசையின் விளையில் குடியிருந்து வருகிறேன். நான் சங்கானங்குளம் பஞ்சாயத்தில் பிளம்பராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கின் மற்றொரு எதிரியையும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் விஜயநாராயணபுரம் காவல் நிலையம் அருகில் பைப் லைன் பார்த்துகொண்டிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(நீதிமன்ற கேள்வி–**

**யாராவது உங்களை மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

2. போலீசார் விசாரணையில் கடந்த 26.09.2016 ஆம் தேதி காலை 12.30 மணிக்கு விஜயநாராயணம் காவல் ஆய்வாளர் வாகன தனிக்கையின் போது, இவ்வழக்கின் எதிரிகளை பிடித்து விசாரித்த போது, எதிரி முத்துதுரை ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் நானும், நெல்சன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் எதிரி முத்து துரை தந்த தகவலின் அடிப்படையில் வழக்கு சொத்தான இருச்சக்கர வாகனத்தை எங்கள் முன்னிலையல் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

3. இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.09.02 18:01:45 +0530

Judicial Magistrate,
Valliyoor.

THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No. 307/2020** | **PW.5** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. முருகன் | |
| Husband/Father | : | திரு. சுப்பையா | |
| Village | : | வள்ளியூர் | |
| Taluk | : | ராதாபுரம் | |
| Employment | : | சிறப்பு உதவி ஆய்வாளர் | |
| Age | : | 49 | Date: 02.09.2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(A1 present. A2 absent Us/317 Crpc petition filed and allowed. )**

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் தற்போது வள்ளியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் நீதிமன்ற அனுமதி பெற்று ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.10.2017 அன்று தேதி 08.30 மணிக்கு காவல் நிலைய தலைமைக்காவலர் திரு.திரவியகுமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது புகார்தாரர் பச்சைமால் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.339/2017 இ.த.ச பிரிவுகள் 379 படி வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை உதவி ஆய்வாளர் திரு.சஜீவ் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.

2. இவ்வழக்கினை அவர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜ்குமார், வேலு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 மற்றும் 9 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் விஜயநாராய காவல் நிலைய குற்ற எண்.148/2017 வழக்கில் கைது செய்யப்பட்ட போது இவ்வழக்கிலும் ஈடுபட்டதாக கூறியதன் அடிப்படையில் எதிரிகளை சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 6 முதல் 8 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் தடயபொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளார்.

3. சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் அவரது புலன் விசாரணையில் இருந்தும் எதிரிகள் மீது குற்றம் உண்மை என தெரியவந்ததால் இ.த.ச பிரிவு 379 பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6, பார்வை மகசர் அ.சா.ஆ.7, மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.8, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9, அத்தாட்சி அசாஆ.10, படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

4. இவ்வழக்கில் கூறியுள்ள நாள் மற்றும் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றும் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில்

விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.09.02 18:01:33 +0530

Judicial Magistrate,
Valliyoor.